# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## THIRD YEAR EXAMINATION IN BACHELOR OF BUSINESS ADMINISTRATION (EXTERNAL) – 2008 / 2009 HELD IN AUGUST – 2009

## BBA 33 – OPERATIONS MANAGEMENT

எவையேனும் ஐந்து (05) வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

01. அ) ஒரு வியாபாரத்தில் ஏன் செயற்பாட்டு முகாமைத்துவமானது முக்கியமாக உள்ளது?

ஆ) ஒரு எடுத்துக்காட்டான முறைமையின் உள்ளீட்டு – மாற்றச் செய்முறை – வெளியீடு (Input – Transformation – Output) தொடர்பினை மாதிரியாகக் கொண்டு பின்வரும் முறைமைகளின் செயன்முறை தொடர்பினை விளக்குக.

i. கல்லூரி அல்லது பல்கலைக் கழகம்
ii. வங்கியின் கிளை அலுவலகம்
iii. உணவு விடுதி

இ) செயற்பாட்டு முகாமைத்துவத்தின் செயற்திற நோக்கங்களை (Performance / Strategic Objectives) சுருக்கமாக விளக்குக.

(மொத்தம் 20 புள்ளிகள்)

02. அ) தரச் செலவுகளின் வகைகளை வரையறுத்து, அவை ஒவ்வொன்றினையும் பொருத்தமான உதாரணங்களுடன் சுருக்கமாக விளக்குக

ஆ) ஒரு காப்புறுதிக் கம்பனியின் ஒரு குறிப்பிட்ட பிரிவிலிருந்து பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களானது அப்பிரிவின் செயற்திற தரத்தை (Performance Quality) பரீட்சிப்பதற்காக நாள்தோறும் மாதிரிகள் எடுக்கப்பட்டிருந்தன. அப்பிரிவின் பரீட்சார்ந்த மாதிரி ஒன்றினை உருவாக்குவதற்காக 100 அலகுகளைக் கொண்ட ஒரு மாதிரியானது ஒவ்வொரு நாளும் 15 நாட்களில் இருந்து பின்வரும் முடிவுகள் பெறப்பட்டிருந்தது.

| மாதிரி | மாதிரியின் அளவு | குறைபாடுடைய விண்.எண்ணிக்கை | மாதிரி | மாதிரியின் அளவு | குறைபாடுடைய விண்.எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | 100 | 4 | 9 | 100 | 4 |
| 2 | 100 | 3 | 10 | 100 | 2 |
| 3 | 100 | 5 | 11 | 100 | 7 |
| 4 | 100 | 0 | 12 | 100 | 2 |
| 5 | 100 | 2 | 13 | 100 | 1 |
| 6 | 100 | 8 | 14 | 100 | 3 |
| 7 | 100 | 1 | 15 | 100 | 1 |
| 8 | 100 | 3 | | | |

i. 95 வீதம் confidence interval னை உபயோகித்து P வரைபினை (P chart) உருவாக்குக. (நியம விலகல் 1.96)

ii. உயர் கட்டுப்பாட்டு மட்டம் (UCL) மற்றும் இழிவுக் கட்டுப்பாட்டு மட்டம் (LCL)

(தொடர்.........2ல்)

iii. பெறப்பட்ட 15 மாதிரிகளையும் வரைபில் குறிக்குக.

iv. இச் செயன்முறை பற்றி உமக்கு என்ன கருத்தினை முன்வைக்க முடியும்?

(மொத்தம் 20 புள்ளிகள்)

03. அ) Just-in-Time (JIT) என்பதன் மூலம் நீர் விளங்கிக் கொள்வது என்ன?

ஆ) Cooper's தொழிற்சாலையானது ஒரு புதிய பொருளினை உற்பத்தி செய்வதற்காக ஒரு வினைத்திறனான ஒழுங்கமைப்பு வரிசை ஒன்றினை (Assembly line) வடிவமைக்க வேண்டியுள்ளது. இவ் ஒழுங்கமைப்பு வரிசைகள் பின்வரும் செயற்பாடுகளானது நிறைவேற்றப்பட வேண்டியுள்ளது.

| நடவடிக்கை | செக்கன்கள் | முன்னைய நடவடிக்கை |
|---|---|---|
| A | 20 | - |
| B | 7 | A |
| C | 20 | B |
| D | 22 | B |
| E | 15 | C |
| F | 10 | D |
| G | 16 | E,F |
| H | 8 | G |

நாளொன்றுக்கு 7 மணித்தியாலங்கள் வேலை நடைபெறுகின்றது. மற்றும் நாளொன்றுக்கு பூர்த்தி செய்யப்பட்ட பொருட்களின் கேள்வியானது 750 ஆகும்..

i. சுழற்சி நேரத்தினைக் காண்க.

ii. கோட்பாடு ரீதியான வேலை நிலையங்களின் எண்ணிக்கை என்ன?

iii. உற்பத்திப் பொருள் ஒழுங்கமைப்பு வரைபடத்தை வரைக.

iv. கிரம வரையறைகள் (Sequential restrictions) மற்றும் நீண்ட நேர வேலைக் கூறு முதலில் (LOT) என்ற விதியினை உபயோகித்து இவ் வரிசையினை சமப்படுத்துக.

v. சமப்படுத்தப்பட்ட இவ்வரிசையின் வினைதிறன் யாது?

vi. ஒரு வேளை கேள்வியானது 750 திலிருந்து 800 அலகுகளாக அதிகரிக்குமாயின் நீர் யாது செய்வீர்? ஏதாவது கணிப்பீடுகளை காட்டுக.

vii. ஒரு வேளை நாளொன்றுக்கான கேள்வியானது 750 – 1000 அலகுகளாக அதிகரிக்குமாயின் நீர் யாது செய்வீர்? ஏதாவது தொகைகளை அல்லது கணிப்பீடுகளைக் காட்டுக.

(மொத்தம் 20 புள்ளிகள்)

04. அ) நியமம் ஒன்றை உருவாக்குவதில் ஒன்று சேர்க்கப்பட்ட வேலை அளவீட்டு நுட்பமானது (Combining work Measurement) ஏன் ஒரு சிறந்த தந்திரோபாயமாகக் காணப்படுகின்றது?

ஆ) வேலை பெரிதாக்கல் மற்றும் வேலை செழிமையானதாக்கல் (Job enlargement and job enrichment) என்பவற்றை வேறுபடுத்துக. அவைகள் தம்முள் புற நீங்குபனவா (Mutually exclusive)?

(தொடர்...........3ல்)

இ) ஒரு அனுபவமிக்க தொழிற்சாலைப் பொறியியலாளர் அசிட் (Acid) கலவை செயற்பாடு ஒன்றுக்கு, நேரடி வேலைப் படிப்பொன்றை மேற்கொண்டார். ஆய்வாளர் கீழ்வரும் சுழற்சி நேரத்தையும், அவதானிக்கப்பட்ட வேலையாள் மதிப்பீடானது 80 வீதமாகவும் மேலதிக வேலை நேரமாக 10 வீதமும் காணப்பட்டது. உபயோகிக்கப்பட்ட நியம நேரத்தை நிர்ணயிக்குக. (Standard time)

| சுழற்சி நேரம் (நிமிடம்) | அவதானிக்கப்பட்ட தடவைகளின் எண்ணிக்கை |
|---|---|
| 2.7 | 3 |
| 2.8 | 4 |
| 2.9 | 2 |
| 3.1 | 1 |

(மொத்தம் 20 புள்ளிகள்)

05. அ) ஓர் உற்பத்தி நிறுவனத்திற்கான தொழிற்சாலை மற்றும் ஓர் சிறப்புச் சந்தை ஒன்றினது அமைவிட பிரச்சினையை வேறுபடுத்தி, அவை பகிரும் மற்றும் பகிர முடியாத காரணிகளையும் காட்டுக.

ஆ) வேறுபட்ட ஒழுங்கமைப்பின் (Layout) வகைகளைச் சுருக்கமாக விளக்கி, வினைத்திறனற்ற ஒழுங்கமைப்பினால் ஏற்படும் பிரச்சினைகளையும் சுட்டிக் காட்டுக.

இ) எவ்வாறு ஒரு பொருள் / சேவை வடிவமைப்பு (Product / Service design) மற்றும் செயன்முறை தெரிவு (process selection) ஒரு நிறுவனத்தின் செயற்திற நோக்கங்களை அடைவதில் பங்களிப்பு செய்கிறது.

(மொத்தம் 20 புள்ளிகள்)

06. அ) நிலையான கட்டளை கனிய இருப்பு மாதிரியின் எடுகோள்கள் மற்றும் நிபந்தனைகளைக் குறிப்பிடுக.

ஆ) ஒரு fast food தொடரானது உள்ளூர் சில்லறை விற்பனை நிலையம் ஒன்றினைக் கொண்டுள்ளது. இது ஒவ்வொரு நாளும் 6 அவுன்ஸ் அளவு கொண்ட 120 பேப்பர் கப்களை உபயோகிக்கின்றது. இது ஒரு வருடத்தில் 360 நாட்கள் திறப்பதற்கு திட்டமிட்டுள்ளது. ஒரு டசின் கப்களுக்கு 10/- செலவாகின்றது. கட்டளை ஒன்றிற்கான கட்டளையிடும் செலவு ரூபா 5/-, பேணுதல் செலவு பொருள் செலவில் 50 வீதமாகும். (இடத்துக்கு கட்டணம் செலுத்தப்படுவதனால்) கட்டளைகள் வந்து சேரும் காலம் 5 நாட்கள்.

i. சிக்கன கட்டளை கணியத்தினையும், மறுகட்டளை மட்டத்தினையும் காண்க.

ii. தற்போது கப்களானது ஒவ்வொரு 30 நாட்களுக்கும் கட்டளையிடப்படுகின்றது எனக் கொண்டு தற்போதைய கட்டளைக் கணியம், உத்தம கட்டளைக் கணியம் மற்றும் தற்போதைய மொத்த செலவு, உத்தம மொத்தச் செலவு என்பவற்றை தொடர்புபடுத்துக. இதன் அர்த்தம் என்ன?

(மொத்தம் 20 புள்ளிகள்)

*****